1990 சனவரி 23] [திரு. கோ. பூவராகன்]

பட்டிருக்கின்றன. அடுத்துள்ள திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தைப் பொறுத்த அழைப்பிதழைப் பார்த்தால் அந்தப் பளபளப்பைக் காணோம். சம்புவராயர் ஒரு குறுநில மன்னனானதால் அவரைப் பின் பக்கத்திலே அச்சு அடித்து விட்டார்கள். அவரை பின்னுக்குத் தள்ளிவிட வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமில்லை. ஆனால் யாரோ சில அதிகாரிகள் இப்படி பின்னுக்குத் தள்ளிவிடுவது நல்லது என்று எண்ணிச் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இனி இருக்கக் கூடாது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மற்ற பல முக்கிய விஷயங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் பேச பின்னாலே சந்தர்ப்பம் இருக்கும் என்று கருதி இதோடு முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று மாலை 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 13-06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

16-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் மாலை 4-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடியது.

10. 24 ஆண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலை இயக்கத்தில் வீரமரணம் எய்திய திரு. முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி அவர்களை நினைவு கூர்ந்து போற்றுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய பெருமக்களே, இந்தப் பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

23-1 என்ற இந்த நாள் ஒரு விடுதலை வீர வரலாற்றில் குறிப்பிடத்தக்க நாள். 23—1—1809-இல் இந்தக் கோட்டைக்குள் இருந்த சிறையிலேயே முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி என்பவர் சிறைச்சாலையில் இருந்து 24 ஆண்டுக் காலம் சிறைத் தண்டனை அனுபவித்து, துன்புற்று, விடுதலை இயக்க வரலாற்றுக்காக வீர மரணம் எய்தியவர். அவருடைய அந்தச் சிறப்பான நினைவைப் பாராட்டி நினைவு கூர்ந்து போற்றுகிறோம்.